


சேலம் மத்திய மாவட்டம். மேற்கு சட்டமன்ற தொகுதியில். கழகதலைவர் முதலமைச்சர். மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த தினத்தையொட்டி. கிரிக்கெட், கபடி, சிலம்பம். கோலப்போட்டிகள் நடத்தப்பட்டது இந்த போட்டிகளில். வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா.இராஜேந்திரன் பரிசுகள் வழங்கினார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் காந்தி மார்க்கெட் இளங்கண் மாரியம்மன் கோவில் அருகில் நடைபெற்றது, கூட்டத்திற்கு வரவேற்புரை 20 அ வட்டக் கழக செயலாளர் செந்தில்குமார், தலைமை மார்க்கெட் பகுதி கழகச் செயலாளர் ஆர்.ஜி.பாபு வகித்தனர். பொதுக் கூட்டத்தில் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் கலந்து கொண்டு உரையாற்றினார் . இறுதியாக நன்றியுரை 20வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.எஸ்.சுருளி ராஜன் கூறினார். இக்கூட்டத்தில் மாவட்ட மாநகர நிர்வாகிகள் செங்குட்டுவன், மூக்கன், லீலாவேலு, நூர்கான் சந்திரமோகன் உ,பொன்செல்லையா, சரோஜினி, தமிழ்ச்செல்வன், பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், ராஜ்முகம்மது, மோகன், மணிவேல், விஜயகுமார், சிவக்குமார் மற்றும் வட்டக் கழக செயலாளர் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

### குளித்தலையிலிருந்து - மணப்பாறை செல்லும் சாலையில்

# இரயில்வே மேம்பாலம் அமைத்திடுக!

### சட்டப் பேரவையில் இரா.மாணிக்கம் கோரிக்கை!



சென்னை, ஏப்.7-

பேரவையில், கேள்வி நேரத்தின்போது குளித்தலை மணப்பாறை செல்லும் சாலையில் இரயில் மேம்பாலம் அமைத்திட வேண்டும் என்று தொகுதி உறுப்பினர் இரா. மாணிக்கம் கோரிக்கை விடுத்தார்.

இதனைத் தெடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**இரா. மாணிக்கம்:** குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் சாலையின் குறுக்கேயுள்ள இரயில்வே பாதைக்கு இரயில்வே மேம்பாலம் வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. நாளொன்றுக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பல்வேறு பணிகளுக்காக குளித்தலை நகருக்கு வருகிறார்கள். ஒரு நாளுக்கு 30 முறை அந்த கேட் மூடப்படுகிறது. மீண்டும் திறப்பதற்கு 20 நிமிடங்கள் ஆகின்றன. மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகிறார்கள்.

அமைச்சர் அவர்கள், 2022 ஏப்ரல் மாதம் இந்த மாமன்றத்திலே அந்த மேம்பாலம் கட்டப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, பொது மக்கள் எப்போது மேம்பாலம் வரும் என்று மிகுந்த ஆவலோடு இருக்கிறார்கள். எப்போது மேம்பாலம் கட்டப்படும்?

**அமைச்சர் எ.வ. வேலு:** குளித்தலை என்று சொன்னால் அது மறக்க முடியாது. எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதன் முதலாக வெற்றி பெற்ற தொகுதி குளித்தலை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முக்கியத்துவம் தந்து, இந்த DPR தயார் செய்து கொண்டிருக்கிறோம். அது நிறைவடைந்தவுடனேயே முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, பணம் பெற்று, அந்த மேம்பாலம் அமைக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ஓசூர் தொகுதி - ஓசூர் வட்டம்

# ஈச்சங்கூர் கிராமம் எல்லம்மா கோயிலுக்கு மின் இணைப்பு!

### சட்டப்பேரவையில் ஒய். பிரகாஷ் கோரிக்கை



சென்னை, ஏப்.7-

சட்டப்பேரவையில், கேள்வி நேரத்தின்போது ஓசூர் தொகுதி உறுப்பினர் ஒய்.பிரகாஷ் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அளித்த பதிலும் வருமாறு:-

**ஒய். பிரகாஷ்:** ஓசூர் தொகுதி, ஓசூர் வட்டம், ஈச்சங்கூர் கிராம எல்லம்மா கோயிலுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** ஒசூர் தொகுதி, ஈச்சங்கூர் கிராம எல்லம்மா கோயிலுக்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி இது நாள்வரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. உரிய வருவாய் ஆவணங்களுடன் இணையதளம் வாயிலாக விண்ணப்பம் அளித்து உரிய கட்டணங்கள் செலுத்தும்பட்சத்தில், விதிமுறைகளுக்குட்பட்டு மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்

**ஒய். பிரகாஷ்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதி, ஓசூர் ஒன்றியம் சேவகானபள்ளி ஊராட்சியில், ராஜீவ் நகர் மற்றும் தும்மன பள்ளி ஊராட்சியில், முனேஸ்வர் நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 110 குடியிருப்புகள் உள்ளன. அங்கு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வாழக்கூடிய பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தினால்,20 ஆண்டுகாலமாக அங்கே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இதுவரை மின் இணைப்பு வழங்கவில்லை. காரணம் அந்தப் பகுதி மேய்ச்சல் புறம்போக்காகவும், கல்லாங்குத்து புறம்போக்காக வும் இருக்கக்கூடிய காரணத்தினால் வழங்கப்படவில்லை. பொறுப்பு அமைச்சர் அவர்கள்கூட நேரில் வந்து ஆய்வு செய்தார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் கருணை அடிப்படையில், அந்தப் பகுதிக்கு மின் இணைப்பை வழங்குவாரா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, இரண்டொரு நாட்களில் துறையினுடைய அலுவலர்களை அங்கு அனுப்பி, ஆய்வு செய்து விதி முறைகளுக்குட்பட்டு அரசு பரிசீலிக்கும்

**ஒய். பிரகாஷ்:** என்னுடைய ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தில் தும்மனப்பள்ளி, நந்திமங்கலம், பழவனப்பள்ளி, குல தாஸ்புரம் ஆகிய ஊராட்சிகளில் மின்னழுத்தம் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினால் அந்தப் பகுதியில் ஒரு துணைமின் நிலையம் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அதே போல, ஓசூர் வளர்ந்து வரக்கூடிய நகரமாக இருக்கக்கூடிய காரணத்தினால், அங்கே 250KV transformers குறைவாக வருகிறது என்ற தகவல் வருகிறது. ஆகவே, ஆறு மாத காலமாக transformers இல்லாமல் காத்துக்கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தினால் ஒசூர் பகுதி வளர்ந்து வரக்கூடிய பகுதியாக இருப்பதால் 250KV transformers அதிகமாகக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** ஓசூர் சட்டமன்றத் தொகுதியில் சீரான மின் விநியோகம் செய்வதற்காக 793 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. 13 மின் மாற்றிகள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், சீரான மின் விநியோகத்திற்காக ஒசூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் இரண்டு புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் அனுமதிகளை வழங்கியிருக்கின்றார்கள். அதற்கானபணிகளையும் விரைவிலே நாங்கள் செய்யவிருக்கின்றோம். உறுப்பினர் அவர்கள் கேட்டதன் அடிப்படையில் இன்று துறையினுடைய அதிகாரிகளிடத்திலே பேசி தேவை ஏற்பட்டால் நிச்சயமாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



ஈரோட்டில் கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக மாணவர் அணியின் ஈரோடு,நாமக்கல் மாவட்டங்களுக்கான கள ஆய்வுக் கூட்டம் கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்றது. ஆய்வில் கழக மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் ஈரோடு வீரமணி வி.ஜி.கோகுல், ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் கிருபாகரன்,ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர் ராசு(எ)கோபால்,ஈரோடு மாநகர அமைப்பாளர் ஸ்ரீதர், நாமக்கல் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் சத்தியசீலன்,நாமக்கல் மேற்கு மாவட்ட அமைப்பளர் பாலசுப்பிரமணியன் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம்,பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் கோடை கால வெப்பத்திலிருந்து பொது மக்களை காக்கும் வகையில் குடி தண்ணீர்நீர்மோர் பந்தலை மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் திறந்து வைத்தார்.உடன் மாநில நிர்வாகி சத்தியமூர்த்தி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தாமோதிரன், சண்முகம்,சதா.சுர்ஜித்,ஒன்றிய கழக துணை செயலாளர்கள் ஜாகிதாசெரீப்,வே.செல்வன்,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### காரிமங்கலத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.

# தகவல் தொழில்நுட்ப அணி கூட்டம்!

தருமபுரி, ஏப்.7-

தருமபுரி மேற்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் வாட்சப் சேனல் கழக நிர்வாகிகள் BLA2,BLC,பின் தொடர்வது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,

தொழில்துறை அமைச்சர்மாநில ஐடி விங் செயலாளர்டி.ஆர்.பி.ராஜா,மாநில ஐடி விங் துணை செயலாளர்டாக்டர்.ஏ.கே.தருண் ஆகியோர் வழிகாட்டுதலின்படி தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி வாட்சப் சேனல் பின்தொடர்வது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் தலைமையேற்று தி.மு.க. ஐடி விங் வாட்சப் சேனலை தருமபுரி மேற்கு மாவட்த்தில் அரூர், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் 750000 க்கு மேற்பட்ட கழக நிர்வாகிகள் பின்தொடர வைப்பது தொடர்பாக விளக்கி சிறப்புரை ஆற்றினார்.மாவட்ட ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் கு.தமிழழகன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக தொகுதி மேற்பார்வையாளர்கள் பாலக்கோடு தொகுதி டி.எம்.அரியப்பன், அரூர் சட்டமன்றத் தொகுதி சி.செல்லதுரை மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி எவரெஸ்ட். என்.நரேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர்.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் சூடப்பட்டி.சுப்பிரமணி,சத்தியமூர்த்தி,தகடூர் ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் கே.மனோகரன்.எம்.எம்.முருகன்,சி.கிருஷ்ணகுமார்,ராஜகுமாரி,கே.சென்னருஷ்ணன், வாசுதேவன்,ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.வி.டி.கோபால், பி.கே.அன்பழகன், எஸ். முனியப்பன்,அன்பழகன், கண்ணபெருமாள்

வேடம்மாள்,செங்கண்ணன்,ரத்தினவேல்,சந்திரமோகன், சௌந்தரராசு,முத்துக்குமார், பி.எஸ். சரவணன்,நெப்போலியன்,சிவபிரகாசம்,மாது,சக்திவேல்,பிரபுராஜசேகர், பேரூர் கழக செயலாளர்கள்கே.வி.கே.சீனிவாசன், பி.கே.முரளி,

வெங்கடேசன்,முல்லைரவி,ஜெயசந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் இளைஞர் அணி ஆர். சிவகுரு, மகளிர் அணி கவிதா மோகன்தாஸ்,மகளிர் தொண்டர் அணி ஜெயா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ராஜ்கமல், எஸ்.பரணிசக்தி பி.என்சி. மகேஷ்குமார், தீ,கோடிஸ்வரன், ஏ.வி. குமார், சசிகலா, தமிழ்பாவை, சதாசுர்ஜித், ஐடி விங் நிர்வாகிகள் கண்ணப்பன்,தமிழ்வாணன், லோகேஷ்வரி, அறிவழகன், பிரபாகரன்,சம்பத் மற்றும் ஒன்றிய, பேரூர் ஐடி விங் ஒருங்கிணைப்பாளர்கள், உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆர். ராஜசேகர்**

**ஏப்ரல் 7 (2022)**



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைக் கழகச் செயலாளர், மதுக்கரை ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**


**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஏ.வி.பி. ஆசைத்தம்பி**

**ஏப்ரல் 7 (1979)**



**கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும், கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில் சட்டப்பேரவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டவர்.**

**பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலேதான் வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட இவரை வாலிபப் பெரியார் என்று நண்பர்கள் – தோழர்கள் அன்போடு அழைப்பார்கள்.**

**“கழகத்தின் கருவூலம், தன்மான இயக்கத்தின் சிங்கம், தந்தை பெரியாரின் மாணவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத்தம்பி, எனக்கு உற்ற தோழர்” என தலைவர் கலைஞர் தனது உரையில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**